மான பயத்தி விரையுமாகும் பாரமுடன் கடலாஞ்சியட்டைதானும் பாங்கானடுவண்ணுகண்பட்டை கூட்டி, வாரவே விளாம்பழத்தின் வித்துக்கூட்டி, வகுப்பான எலுமிச்சன் வித்துவாமே. 155

வித்தான நரிமிரட்டி வேறுங்கூட்டி விதமான கரும் பசளை செம்பசளையாகும், முத்தான வெள்ளையென்ற குன்றிதானும் முளையான வரசனிடவித்துதானும், சித்தான குறிஞ்சாவின் வித்துங்கூட்டி சிறப்புடனேயெட்டியென்ற வித்துமாகும், சுத்தானவித்தாதி சரக்கையெல்லாம் சூட்சமுடன் களஞ்சியது வெடுத்துக் கொள்ளே.

எடுக்கவென்ருல் சரக்கெல்லா மொன்ருய்க்கூட்டி எழிலான சூரணமாய்ச் செய்துக்கொண்டு, தொடுக்கவேமுன் சொன்ன சரக்கோடொக்க துறையோடும் சேர்வை கண்டு, கொடுக்கவே சீனியது பாவுசெய்து கொற்றவனே சூரணத்தைப்போட்டுமேதான், விடுக்கவே நெய்தேனும் விட்டுக்கூட்டி விருப்பமுடன் மெழுகுபதந் தன்னிற் கிண்டே. 157

கிண்டையிலே மதுரமாம் திராட்சிதானும் கிளையான கதலியிட தேனுமாகும், பாண்டுடனே கொடிமுந்திரி ரசமுமாகும் பாங்கான குங்குமப்பூ கஸ்தூரிதானும், விண்டிடவே வாலுகையா மடுப்பிலேற்றி வீரரான ஜலமதுவும், போகக்கிண்டி, கண்டுமே மெழுகு பதந்தனிலிறக்கி கணபதியை தானினைந்து கருத்தில் நில்லே. 158

நிற்கையிலே கணபதியுங் கந்தன்ருனும் நிறுவாணி மயேஸ்வரியுமெதிரில் நிற்பாள், துற்கையெனும் பத்திர காளியம்மன் துரைமுகமாய் நின்றுகொன்று காட்சியீவாள், பற்குணனு மர்ச்சுனற்கு தந்தகாட்சி பாலகனே யுந்தனுக்கு மீவாள்பாரு, விற்பிடித்த மன்னரெல்லாக் காளிக்கல்லோ விண்ணுலகில் தான்நடுங்கி விடுபட்டாரே.

பட்டாரே ராஜர்முடி மன்னரெல்லாம் பத்திரகாளியம்மன் சாபத்தாலே, கெட்டலைந்து மாண்டதொரு வேந்தரெல்லாம் கெடியான யெந்தனது குருவினுலே, விட்ட குறையிருந்த தொரு நேர்மையாலே வேதாந்த காலாங்கி நாதர்தம்மால், பட்டமுடி மன்னரெல்லா மீண்டுதாம் பாரினிலே நெடுங்காலம் வாழ்ந்திட்டாரே. 160

வாழ்ந்திட்ட காலமது தன்னிலேதான் வாகுடனே மாந்தரெல்லா மொன்ருய்க் கூடி, தாழ்ந்திட்ட ரிஷிகோடி முனிவருக்கு தகமையுடன் லேகியத்தைச் செய்யவென்று, ஆழ்ந்திடவே தம்கருத்தில் மனதிலுன்னி அப்பனே சீனபதி மார்க்கஞ்சென்று, சூழ்ந்திட்ட போகரை தானடிவணங்கி சூட்சமுடன் பாகமதை யறிந்தார்தாமே, 161



அறிந்துமே காயகற்ப லேகியத்தை அன்புடனே நாதாந்த ரிஷிகளுக்கு, செரிந்துமே பாகமுடன் செய்துமேதான் சிறப்புடனே யுன்பதற்கு கற்பமீந்தார், முறிந்துமே யானந்த கற்பந்தன்னை முப்பொழுது முண்டுமல்லோ களித்துமேதான், வெறிந்துமேசினமதுமொவுடிங்கியேதான் வெட்டவெளி தனிலிருந்து கும்பித்தாரே. 162

கும்பித்து நிற்கையிலே சிவயோகிதானும் குவலயத்தில் மானிடர்மே லிச்சைகொண்டு, தம்பனங்கள் முதலான வசியமார்க்கம் ஜெத்திலே வஷ்டவித கருமமயாவும், சும்பனமாம் கொக்கோக லீலையாவும் சூட்சாதி சூட்சமெல்லாஞ் சுளுவாய்ச்சொல்லி, சம்பகத்திலிருந்து கொண்டு சதாநிஷ்டையாவும் சட்டமுடன் தாமறிந்தார் பலமாந்தர் தாமே. 163

தாமான சித்தர்களு முனிவர்தாமும் சதகோடி சூரியர் போல் பிரகாசித்து, பூமானுங் கருவாளி யானபேர்க்கு புகழுடனேயிப்பாதஞ் சொன்னுறல்லோ, காமான மாகவே தான் காயகற்பம் கருத்துடனே செய்தார்கள் மனுக்கள் கோடி, நாமேதான் சொல்லிவிட்டோம் மறப்பையெல்லாம் நலமுடனே நாதாக்கள் செய்வார்பாரே. 164

**லேகியத் தத்துவம்**

பாரேதான் லேகியத்தின் பெருமைகேளு பாருலகிலறிந்தமட்டுஞ் சொல்வேன்பாரு, நேரேதான் தூதுளங்காய்ப் பிரமாணந்தான் நேர்மையுடன் வுண்டவர்க்கு முறைமை சொல்வேன், சேரேதான் ஆவின்பால் கொள்ள வேண்டும் செம்மையுடனவர் தமக்குக் காட்சிமெத்த கூரேதான் கெவுனமுடன் குளிகைகொண்டு கொற்றவனே வதிசயங்கள் சொல்வார்காணே. 165

காணவே வானுலகில் போகுஞ்சித்தர் கண்ணுக்குற்ருேற்றுவது மெய்போலாகும், பூணவே சூரியனுமெதிரே நிற்பான் பொங்கமுடன் சந்திரனும் தூரேநிற்பான் வேணவே லாகிரிகளுண்டபோது வெகுவான விநோத வகை சொல்லலாகும், தோணவே நேத்திரங்களிருந்து கொண்டு தொல்லுலகில் கண்டதெல்லாம் பினத்துவாரே.

பினத்துவார் ஆகாச மார்க்கந்தன்னை பெருமையுடன் அதிசயங்கள் மிகவுஞ்சொல்வார், நினைப்புடனே கண்ணுக்கு தோற்றம்யாவும் நிலையான வதிசயம்போல் கூறுவார்கள், புனப்புடனே பித்தமது மேலேசொக்கி புகழான கபாலத்தை வரட்சிசெய்யும், தினப்புடனே சரீரமெங்கும் தினவுண்டாகும் திரளான தேகமது சொக்கிப்போமே.

சொக்கவே காயாதி பூரணத்தால் தொல்லுலகி லதித வகை மெத்தக்கூறும், சிக்கவே மலைகுகைகள் வனந்திரத்

குணமான செங்கோட்டை சிவனார்வேம்பு, நாறான செங்காலிவேறினோடு நறுங்கந்தம் பீனாறிபட்டை தானும், நாறானபூதமாம் விருட்சத்தோடு பாங்கான கருங்குன்றி வேது மாமே. 181

ஆமேதான் கருங்காலி பட்டைதானும் அப்பனே செனாமறைவேறினோடு, தாமேதான் வெம்பாடம் பட்டை தானும் தாக்கான கொழிங்சியிட பட்டைமூலம் வேமே தான் விராலியிட மூலந்தானும் விரையான பேய்மிரட்டி பட்டைமூலம், நாமேதான் சொன்னபடி வகிற்கட்டைதானும் நலமான சந்தனமும் செஞ்சாந்துமாமே. 182

சாந்தான பூவந்திபட்டைதானும் சதுரான வெண்ணாவல் பட்டையோடு, காந்தமெனும் வேய்கையுட பட்டை தானும் கருவான வுதிரமாம் மூலத்தோடு, பாந்தலெனும் கொங்கலவன் மூலத்தோடு பளிங்கான விராலியிட மூலந்தானும், வேந்தர் கைக்கோலூன்றி விருட்சமூலம் விரைவான பட்சையுட மூலந்தானே. 183

மூலமொடு கரும்பசளை செம்பசளைதானும் முஷ்டியுடன் கருவாகை பெருவாகைதானும், சீலமுடன் பற்படாமயிம்பூராவும் சிறியானின் நங்கையுடன் பெரியாநங்கை, காலமெனும் புளியாரை சிறியாறைதானும் தகமையுள்ள நிலவேம்புகருவேம்புதானும், பாலமெனும்பொடுதலையாஞ் சீந்திலோடு பசுமையாம்பொற் சீந்திநற் சீந்தியாமே. 184

சீந்திலொடு செவ்வாழை கருவாழைதானும் சிறப்பான வுப்பதுவும் தானுமாகும், சாந்திமலர் நந்தியாவட்ட மூலம் சார்புடனே கொன்றைவேர் புன்னைவேறும், தாந்திகழுஞ் செங்கழுநீர்ப்பூண்டுதானும் தகமை யுள்ளவட்டாரி துத்திமூலம், ஏந்தலெனு மயிற்கொன்றை யிருவாட்சிதானும் யென்மகனே வகைக்கு ஒரு பலமாய்த்தூக்கே.

தூக்கையிலே தூக்கமது வதிகங்காணா தொல்லுலகில் மூலிவகை சமனதாக, ஏக்கமுடன் மூலவகைரெட்டிப்பாக யெழிலான சூரணமாய் செய்துகொள்ள, கோக்கமுடன் ரவிதனிலே காயப்போடு நுணுக்கமுடன் கல்லுரலில் மாவதாக்கி, பாக்கவேதான் சூரணத்தைச் சுத்தி செய்து பசும்பாலில் புட்டாவி செய்திடாயே. 186

செய்யவென்றால் கைபாகஞ் செய்பாகங்கேள் செப்புகிறேன் தளவாயஞ் சட்டிதன்னில், டையவேயாவின் பால் பாண்டமிட்டு பாகமுடன் சூரணத்தை சீலைமேலே, யொய்யவே புட்டுபோல் பிசறிவைத்து முசியாமல் மேல்சட்டி கொண்டுமூடி, வெய்யவே தானெறிப்பாய் கண்டமட்டும் மகனே தானறிப்பாய் புகலக்கேளே. 187



கேளேதான் ரவிதனிலே காயப்போடு கெணிதமுடனிப்பாகம் பத்துபோடு, கோளேதான் வாராமற் சூரணத்தை கொப்பெனவே தானெடுத்து செப்பக்கேளு, பாளேதான் நேராமற் சீனிசேர்த்து பதமுடனே மண்டலந்தான் கொண்டாயானால், நாளேதான் தேகமது கற்றூணாகும் நளினமுடன் போகரிஷி நவின்றவாரே. 188

வாரான கற்பமென்ற சூரணத்தை வாகுடனே கொள்பவனுஞ் சித்தனாவார், நேரான சீனபதி மாந்தருக்கு நேர்மையுடன் றானுரைத்த கற்பமாகும், சீரான கற்பமதுவுண்டபேர்க்கு தேசத்தில் வயதல்லோ லக்கோயில்லை, காரான கடந்தமுனி சித்தனென்பார் காயாதிகற்பத்தின் பான்மைதானே. 189

தானான கற்பமது வுண்ணும்போது சதாகாலம் நிஷ்டையுடே யிருக்கலாகும், வேனான கற்பத்திற் குறுதி சொல்வேன் வெளியரங்க மாகவல்லோ திரியவேண்டாம், பானுமதி சூரியனும் பார்க்கவொண்ணா பாலகனே யொடுக்கமதி லிருக்கவேண்டும், தேனான புளிபுகையுந் தள்ளவேண்டும் தேசமதில் காயத்தை நிறுத்துவாயே.

நிறுத்துகையி லஷ்டாங்க யோகம்வேண்டும் நிலையான சமாதிதனிலிருக்க வேண்டும், பொருத்துமே சிவயோகந் தன்னிற்சென்று போக்கான வாசியைத்தானிருத்தவேண்டும், கலுத்துமே வாத்துமத்தின் நிலையைக் காண கலியுகத்தில் வெகுகால மிருந்தார்தாமும், மறுப்புடனே பிறவியது காணாமற்றான் மானிலத்தில் மடிந்தவர் கோடியாமே. 191

கோடியாஞ் சித்தர்களு முனிவர்தாகும் குவலயத்தே கற்பமுண்டு யிருந்தார்தாமும், பேடியாஞ்சில மாந்தரவரைப்பார்த்து பேரின்ப நிலைதனையே யொழித்தாற்போலும் நாடியே யவர்களிடஞ் சென்றுமேதான் நயனமுடன்லகு வார்த்தை மிகவும்பேசி, வாடியே யவர்பதத்தில் கிட்டி நின்று வாகுடனே கற்பமதை முறைகேட்டாரே.. 192

முறையுடனே கற்பமதை வாங்கிக்கொண்டு மூதுலகில் வெகுபேர்கள் செய்யவெண்ணி, கறைகண்ட வயித்தியன்போல் மனதிலெண்ணி காசினியில் முறைகெட்டுத் தாருமாறாய், திரைமருவு தெரியாமல் தேர்ந்தோன்போல திறமையுடனனுபோகந் தெரியாமற்றான், குறைமனதாய் சூரணத்தை செய்துமேதான் குவலயத்தில் கெட்டவர்கள் கோடியாமே. 193

கெட்டலைந்து போனவர்கள் கோடாகோடி கெவனமுடன் செய்யாதார் கோடாகோடி, சுட்டலைந்து போனவர்கள் கோடாகோடி சூட்சமுடன் வயித்தியத்தைக் காணார்கோடி, பட்டலைந்து கெட்டவர்கள் பாடுபட்டுபத

மிழந்து போனவர்கள் கோடாகோடி, திட்டமுடன் சாஸ்திரத்தைப் பாராமற்ருன் திடங்குலைந்து நலிந்துபோனுர் தாமே 194

போனுரே மூதுலகில் பெரியோர்யாவும் பொலிவான சாஸ்திரத்தைப் பொய்றென்றெண்ணி, ஏனுேதான் மானிலத்தில் சுட்டுக்கெட்டு யேளிதங்களாகவல்லோ மாண்டு போனுர், நானேதான் கண்டமட்டுஞ் சாஸ்திரத்தை நன்குடனேயாராய்ந்து, பலநூல்கண்டு, பானுமதி சுடர்போலே திரட்டியல்லோ பாடிவைத்தேன் சத்தகாண்டம் பண்பாய்த்தானே. 195

பண்பான சாஸ்திரத்தை பாடிவைத்தேன் பாரினிலே மாண்பரெல்லா மறந்துபோனுர், திண்பான சீனபதி மார்க்கத்தோர்கள் திறமுடனே கண்டறிந்து யெடுத்துக்கொண்டார், நண்பான சாஸ்திரத்தை மெய்யென்றெண்ணி நயமுடனே பலம்விளையுமென்று கந்துகண்பான நூற்கோர்வையாவுங்கண்டு காசினியில் மாந்தருக்கு கருதினேமே.

### செப்பிடு வித்தை

கருதவே யின்னமொரு கருமானங்கேள் காசினியில் மானிடர்கள் பிழைக்கவென்று, துருதமுடன் ஜாலமென்ற வித்தை சொல்வேன் தொல்லுலகில் செப்பிடுவித்தைக் கண்டீர், பருவமுடன் கன்னியென்ற பெண்ணைத்தானும் பாங்குடனே ஜோடினைகள் மிகவேசெய்து, உருவமுடன் கைச்சிலையாங் கையிலீந்த உத்தமனே வாளுமொரு கையிலீயே. 197

ஈயவே லோகமென்ற வாய்வினுலே யெழிலான பிரதமைகளொன்று செய்து, மெய்யுடனே ரூபமதை தானமைத்து மேன்மையுடன் காந்தமென்ற சத்தைதானும், கைதனிலே தானுருக்கி சேர்வைகொண்டு கசறடவே யிரும்புக்குக் காரமேத்தி, பெய்யவே யிடைகண்டுயினமுங்கண்டு பேரான கருக்குருவுங் தானுங்காணே. 198

காணவென்ருல் பிரதமைக்கு வுயிரேயில்லை காசினியில் வாவென்ற ரூபமப்பா, தோணவே ரூபமது வார்த்தையில்லை தோற்றமுடன் பார்வையது ஒளியேயில்லை, வேணவே கண்ணுக்கு விநோதவித்தை வேடிக்கைப் பார்த்தவர்க்குப் பகடியாகும், ஊணவே வடகரத்தில் பதுமையேந்தி வுத்தமனே யிடகரத்தில் வாளையீயே. 199

வாளுடனே கேடகமுங் கையிலேந்தி வளமையுடனிடப்புறத்தில் வாளினுலே, தாளுடனே பூமிதனிலிருந்து கொண்டு தககையுடன் கேடகத்தைப் பதுமைமீதில், மாளுவது போலாக வாளைவீசி வல்லுயிரை வாங்குகின்ற வீரனைப்போல், கோளுகளு நேராமல் குமரிதன்னுல் கொற்றவனே தாளுதனை சக்கரத்திலீயே. 200



சக்கரமாம் வாளுதனை கேடகத்திலேந்தி சட்டமுடன் முன்பின்னுய் பிரட்டியேதான், மிக்கவுடல் கீழ்விழவே வாளும்மேலே மேலானவாளுமது பதுமைகீழே, தொக்கவுடல் பதுமையது மேலேயாகும் தொல்லுலகில் வாளுமது கீழேயாகும், தக்கபடி செப்பிடுமாஞ் சாலந்தன்னில் சட்டமுடன் பதுமையது தோரொண்ணுதே. 201

தோர்க்காது பதுமையது வாளினுலே தொல்லுலகில் பதுமையது மேலேநோக்கும், பார்க்கவே லோகத்து மாங்தருக்கு பாங்கான செப்பிடு ஜெகஜாலந்தான், ஏர்க்கவே வதிசயத்தை மிகவேகாட்டும் யெழிலாக பிடிப்பார் மாங்தர்கண்டீர், மார்க்கமுடன் மாந்திரீக மென்பார் காணீர் யென்மகனே ஜாலமென்ற வித்தைதானே. 202

வித்தானவித்தையிது ஜாலவித்தை மேதினியில் ஜெகஜாலவித்தையப்பா, சித்தானசித்தர்முனி ரிஷிகள் தாமும் சிறப்புடனே பூவுலகில் ஆடும்வித்தை, சுத்தான கோட்டையிது யின்னஞ்சொல்வேன் சுரூபமென்ற காந்தமது கோட்டையப்பா, குத்தானகல்லதுதான் நடுமையத்தில் கொற்றவனே சங்கிலிக ளணியாய்மாட்டே. 203

மாட்டையிலே நடுக்கம்மீதிருந்து நடுவான குத்துக்கால் மீதிரங்கி, கோட்டையது வாசலது காந்தக் கோட்டை கொப்பெனவே நடுவாசல் வந்துநின்று, நீட்டமுடன் கன்னிகையில் வாள்கொடுத்து நீளமுடன் நெடுக்குவரை சுத்திவந்து, மூட்டமுடன் கேடகத்தை கோட்டைமீதில் முனைநடுவாம் மத்திபத்தில் முன்னேவையே.

வைத்துமே தலைகீழாய் சுத்திவந்து வளமுடனே குத்துக்கல் மீதிருந்து, குத்துடனே பிரமையை கேடகத்தால் குறிப்புடனே நேர்பார்த்து பாரின்மீது, எத்தலுடன் கேடகத்தை கையிலேந்தி யெழிலான பிரதமையை மேலே வைத்து, சுத்திய கோட்டைவழி தான் கடந்து சூட்சமுடன் பிரதமையை கீழ்வையே. 205

கீழானபதிதனிலே பிரதமையும் நிற்க கீர்த்தியுடன் கேடகமுந்தழுவிவிளையாட, தாழானபூமிதனில் கேடகமுநின்று சட்டமுடன் பிரதமையும் யெகிரிக்குத்த, சாழான கோட்டைக்குள் சண்டையதிவேகம் சாங்கமுடன் பத்மயுகம் சரிமுறிதலாக நீழான செகஜால வித்தையிது, தானுங் நீணிலத்தி லதிகமெனும் பதுமைவித்தைதானே.

பதுமையாங் கோட்டைக்குள் காவலதிகாரி பாங்குடனேயெதிர்நின்று பேசும் படைதன்னை, புதுமையுடன் பிரதமைதானெழுந்து புகழ்ச்சியுடன் கேடகத்தின் கீழிருந்து,

காணவே தேகமது சட்டைதள்ளி காசினியில் வெகு காலமிருந்தசித்து, தோணவேயுகாந்தவரைக் கண்டசித்து தொல்லுலகிலான சதனைத்துறந்தசித்து, பூணவே கைலங் கிரிவாழுஞ்சித்து புகழானரோமரிஷி வேணபடி மயிற்கற் பம்கொண்டேசித்து மேதினியில் சுயரூபசித்துதானே;

### மயில்யெச்சக் களங்குவேதை

தானையின்னமொரு மார்க்கங்கேளு தகமையுள்ள புலிப்பாணி மைந்தாபாரு, கோனைன எனதையர் காலாங்கி நாதர் கொற்றவனுரெந்தனுக்குச் சொன்னநீதி, மானை ரோமரிஷி யுண்டகற்பம் மகத்தான மயிலினது யெச்ச மப்பா, வூனைவுடல்தனிலே வந்தயெச்சம் வுத்தமனே ரோமரிஷி பாகங்கேளே. 282

கேளேதான் யெச்சமதைக் காரமிட்டு கிருபையுடன் மூசைதனிலடைத்துமல்லோ, தோளேதான் வாராமல்வுலை யில்வைத்து தொற்றவனே வச்சிரமாங்குகையைத்தானும், பாளேதான் போகாமல் பதுங்கவூதி பக்குவமாய்த்தா னெடுத்தார் களங்குமாச்சு, தூளேதான் களங்கமது நாலுக்கொன்று துப்பாமாய்க் காந்தமது சேர்த்திட்டாரே.

இட்டாரே தங்கமது பத்துக்கொன்று யெழிலாகக் குழிக்கல்லில் பொடியதாக்கி, சட்டமுடன் கையாணன் சாற்றிலுலே தானரைப்பாய் நாற்சாமமானபின்பு, திட்ட முடன் ரவிதனிலே காயவைத்து திடமான காசியென்ற குப்பிக்கேற்றி, வட்டமுடன் மரக்கல்லால் கொண்டுமூடி வண்மையுடன் சீலையது செய்தார்தாமே. 284

செய்தாரே காசியென்ற குப்பிதன்னை செம்மையுடன் தளவாயாம் பாண்டங் தன்னில், பையவே மணலதனைக் கொட்டுமைந்தா பாங்குபெற நடுமையங்குப்பிதன்னை, பெய்யவே குப்பிமேல் மணலைக்கொட்டி பேரானமேற் பாண்டந்தன்னைமூடி, துய்யவே வாலுகையா மேந்திரத் தில் துப்புரவாய் நாற்சாமமெறித்திட்டாரே. 285

எரிக்கவே செந்தூரமென்ன சொல்வேன் யெழிலான நாற்சாமமானபின்பு, சொரிக்கவே மணலதுவுஞ் சிவந்து மெத்த சுத்தமுடன் செந்தூரங் காந்தியாச்சி, பரியான செந்தூரமென்ன சொல்வேன் பாருலகில் சித்தர்முனிசெய் வாரோதான், சரியான வேதையிது ரோமர்வேதை சட்ட முடன் முடித்தாரே சித்துமாமே. 286

சித்தான ரோமரிஷி செந்தூரத்தை திறமுடனே குப்பி யது திறந்துபார்க்க, சத்தானசரக்கெல்லா மொன்றுயச் சேர்த்துச் சங்கமுடன் செந்தூரம் நாவோயில்லை, சுத்த முடன் மனோன்மணியைத் துதித்துமேதான் சுக முடனேசெந்தூர மெடுத்தார்பாரே. 287



எடுத்ததுமே செந்தூரம் மைந்தாகேளு யெழிலான வெள்ளிசெம்பில் பத்துகொன்று, கொடுத்துமே தானு ருக்கி யெடுத்துக்கொண்டு கொற்றவனே யோட்டில் வைத்து வூதும்போது, படுத்ததொரு மாற்றதுவு மென்ன சொல்வேன் பாலகனே வயததுவும் யெட்டதாகும் அடு த்துமே தங்கமது நாலுக்கொன்று வப்பனே புடம்போட தங்கமாச்சே. 288

தங்கமென்ருல் சுயத்தங்கம் பிரிதிலாச்சு தாரணியில் சமுசாரிக் கானவேதை, பங்கமது வொருக்காலும் சேரா தப்பா பாண்பான மாண்பர்களுக்கானவேதை, புங்க சித்து யெட்டுவகை யடையலாகும் புகழான ரோமரிஷி வேதைதானும், வங்சத்துக் கொருநாளும் யிடையா தப்பா வர்னமென்ற செந்தூர வேதையாமே. 289

### செந்தூரமுண்ண

வேதையின்ன மொருபோக்கு கேளுவீரன செந்தூர மென்ன சொல்வேன், பாதையாம் நெய்தேனிற் குன்றி தானும் பாலகனே மண்டலந்தான் கொண்டாயானுல், தீதகன்று தேகமது கற்லூணுகும் திறமான சட்டையது தள்ளும் பாருமீதலத்தி லுண்டவருஞ் சித்தனுவார் புகழான செந்தூரக் களக்குதானே. 290

தானை செந்தூரமுண்டுமல்லோ தன்மையுடன் சமாதிக்குப் போகவென்று, கோனைகுருசொன்ன வாக்கு தம்மை குறையாமல் தன்மனதில் தான்நினைந்து, பானை சாமாதிக்கு யிடமுந்தேடி பட்சமுடன் சீஷர்களைத் தானழைத்து, மானைடில்லிக்கு மேற்கேயப்பா மகத்தான சமாதிக்கு யிடங்கண்டாரே. 291

### ரோமரிஷி டில்லிக்கு மேற்பாகத்தில்சமாதியடைதல்

கண்டாரே டில்லிக்கு மேற்கேயப்பா கனமான ரோம ரிஷிமுனிவர்தானும், அண்டர்முனி யறியாத வனுந்தரத் தில் அங்ஙனவே சமாதிக்கு யிடமுங்கண்டு, தொண்ட ரெனுஞ் சீஷவர்க்க மானபேரை துரைராஜசுந்தரனுர் தாமழைத்து, விண்டிடவே சமாதியது தோண்டுதற்கு விருப்பமுடன் வுத்தரஞ்செய்தோர்பாரே. 292

பாரேதான் தீஷவர்க்கமாண்பரோடு பாங்குடனே சமாதியதி லிரங்கவென்று, நேரேதான் சீஷர்முகந் தன்னை நோக்கி நேர்மையுடன் தாமுரைப்பார் ரிஷியார்தாமும், கூறேதான் சமாதிக்கு போறேனப்பா கொற்றவனே யிரு

தன்னை நீடாழியுலகமதிலிருந்தவாறு நேரேதான் முன்
செய்த பாக்கியந்தான் நிட்சயமாய் இந்நாள் மட்டிருந்
தீரப்பா கூறேதான் உம்மைப்போல் சித்துகுண்டோ
குவலத்தில் விட்டகுறை யிருந்தசித்து. 843

சித்தான சித்துமுனி யுந்தமக்கு சிறப்பான வுபதேச
மென்னவென்றால், முத்தான லோகமதி லதிசயங்கள்
மூதுலகில் மெத்தவுண்டு சொல்வேன்கேளீர், புத்தியுள்ள
பூமானே துவாபரயுகத்தில் புகழான காலாங்கி யுந்த
நாதர், சத்தியரிச் சந்திரனார் திருச்சங்கு சத்தமுள்ள வர
மதுவும் மிகத்தந்தாரே. 844

தந்தாரே வரமதுவும் மிகவும்பெற்று தாரணியில்
காயாதி கற்பங்கொண்டு பந்தமுட னயோத்திநகர்
தன்னையல்லோ பட்சமுடன் நெடுங் காலமாண்டிருந்து,
விந்தையுள்ள வதிசயங்கள் யாவுங்கண்டு மிக்கான
காயாதி கற்பங்கொண்டு, அந்தமுடன்குருவி னுபதேசம்
பெற்று வரிச்சந்திரன் மைந்தனையும் மெற்றார் தானே.

**காயகற்பத்தால் அரிச்சந்திரன் பிறந்தது**

தானான திருச்சங்கு ராசனுக்கு சார்பாக நெடுங்கால
மைந்தனில்லை கோனான காலாங்கி நாதர்தானும் கொற்ற
வனார் தேவரிஷி கொடுத்தகாயம், தேனானதிருச்சங்கு
கொண்டபின்பு தோற்றமுடன் மைந்தனையும் பெற்று
மல்லோ, பானான சத்தியரிச் சந்திரன்றான் பார்தனிலே
பிறந்ததொரு வண்மைகேளே. 846

கேளேதான் சித்தினது வாசீர்மத்தால் கீர்த்தியுடன்
சத்தியரிச்சந்திரன்றான் காளேதான், போகாமல் சதா
காலந்தான் நாவுதவராமலல்லோ சிறுபாலன்றான், பரே
தான் தேகமது வழிந்திட்டாலும் பக்குவமாய் வையகத்
தில் பொம்கூறாமல், சூளேதான் தேவாதி தேவர்மெச்சு
சுந்திரனுந் தேவிதனை யிழந்திட்டானே. 847

இழந்தானே நெடுங்காலஞ் சுடலைகார்த்து யெழி
லான பணிவிடைக்கு யாளுமாகி புழங்கிடவே வையகத்தி
லாகசெய்து புகழான கீர்த்தியதிகம் பெற்றுவழங்கிடவே,
ராசாதிராசர்மெச்ச வளப்பமுடன் தேவசித்து யென்று
கூற, தழம்பிடவே நெடுங்கால மரசுசெய்து சட்டமுடன்
மண்ணதனில் சென்றார்பாரே. 848

பாரேதான் வுத்தமர்க்கு வயந்தனாலே பார்த்திபனே
யுபதேசம் பெறுவதற்கு சீரேதான் நற்காலம் சேர்த்து
தப்பா, சிறப்பாக ஞானோபதேசம்செய்தேன் ஆரேதான்
சித்தர் முனிரிஷிகள்தாமும் வப்பனே யுந்தமக்கு ஒன்றுங்
கூறார் நீரோதான் கொண்டதொரு குளிகையப்பா நீதியுட
னேழுவரை செல்லுந்தானே. 849



**வரைசெல்லும்படி வரங்கொடுத்தல்.**

தானான காலாங்கிநாதசீஷா தன்மையுடனுந்தனது
குளிகையல்லோ, கோனானயிமயகிரி பர்வதத்தின்கொற்ற
வனேயேழுவரை சென்றுதல்லோ, பானான பதினான்கு
வரையுஞ் செல்ல பார்த்திபனே யுந்தனுக்கு வரமுமீய்
வேன், மானான சித்தர்முனி ரிஷிகள்தாமும் மார்க்கமுடன்
சாபமது தந்தார்பாரே. 850

தந்தாரே சித்துமுனிரிஷிகள் சாபம் தான்கொடுத்த
சாபமதை நிவர்த்திசெய்து, அந்தமுடன் வுந்தமக்கு
குளிகைசெல்ல வப்பனே வாமதுவுந்தந்தேன்யானும்,
இந்தொரு வரமதுவு முந்தனுக்கு யெழிலாகயிருபத்
தோர்வரையுமட்டும், முந்தவேயேழுவரை செல்லும போக
முனையான பதினாலுவரை செல்வீரே. 851

செல்லவேகுளிகையது கொண்டுமல்லோ சிறப்பு
டனே மலைதனிலேசெல்லும்போது, புல்லவேவெகுகோடி
வதிசயங்கள் புகழான மலைதனிலே காணலாகும், கொல்
லவேயுந்தனையுஞ் சித்துதாமும் கொப்பெனவே வருவார்
கள் கோடிபேர்கள், வெல்லவே யவர்களையுமுந்தனுக்கு
விருப்பமுடனுபதேசஞ் சொல்வேன்காணே, 852

காணவேபோகரிடி புனிதவானே கண்மணியேயுந்
தனுக்குயிடையூர்வந்தால், தோணவே காலாங்கிநாதர்
தம்மை தோற்றமுடனவர்பாதந்தனை நினைந்து, நீணவே
யஞ்சனமாங்கிரியில்வாழும் நிஷ்களங்கமான சதாசிவத்
தையப்பா, ஆணவங்கள் தானொடுங் கிநீயுமப்பா வப்
பனே யெந்தனையும் நினைத்திடாயே. 853

நினைக்கையிலே யுந்தனுக்கு வந்ததுன்பம்நிட்களங்க
மாகவல்லோ ஜெயமுங்கொண்டு, தினகரன் போலவர்
களுக்குப் புனிதவானாய் தீர்க்கமுட நீநினைத்த காரியங்
கள், சினமதுவும் வாராமல் ஜெயமும்பெற்றுசிறப்புடனே
குளிகையதுகொண்டுமேதான், வனமெலாந்தான் திரிந்து
சிகரமட்டும் வரமுடனே தலைதனைவிட்டிறங்குவாயே.854

இறங்கியே யென்னாளுங்கீர்த்திவானாய் யெழிலாக
வையகத்திலிருந்துகொண்டு, துறவரத்தில்செல்லாம லில்
லரத்தில் துப்புரவாயெந்நாளும் பாக்கியவானாய், குறை
யதுவும்நேராமல் குவலயத்தில்கொற்றவனே சீனபதிக்கு
வானாய், நிறையுடனே வாழ்கவென்று ஞானந்தந்தா நீதி
யுடனுபதேசஞ் செய்தார்தாமே. 855

**போகர் சதாசிவரிடியாரிடத்தில் விடைபெற்று
சீனபதிக்கு யேகுதல்.**

தாமேதரனின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தய
வானபுலிப்பாணி மைந்தாபாரு, நாமேதான்சொன்னபடி
வஞ்சனந்தான்நல்மானகிரிதனிலே சென்றேன்யானும்,